செ.வெ.எண்: 01 நாள்: 01.02.2018

**தமிழ்நாடு முழுவதும் இந்த ஆண்டு முதல் ரூ.38 கோடி மதிப்பீட்டில் 48 பாரா மெடிக்கல் கோர்ஸ் அவசர சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகளுக்காக துவங்கப்படவுள்ளது – மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆய்வக நுட்புனர் (DMLT) முதலாம் ஆண்டு பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (01.02.2018) துவக்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வக நுட்புனர் பட்டயபடிப்பு மாணவ மாணவியர்களுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கி பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவான அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையினை மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆசியுடன் கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதனை தொடர்ந்து முதல் ஆண்டிலேயே 150 மருத்துவ மாணவ மாணவியர்கள் வரலாற்று சாதனையாக மருத்துவ சேர்க்கையில் சேர்ந்தனர். இதனை தொடர்ந்து இன்றைய தினம் 81 பேர் ஆய்வக நுட்புனர் பட்டய படிப்பில் மருத்துவ கல்வி இயக்குநரால் தேர்வு செய்யப்பட்டு சேர்ந்துள்ளனர். இந்த 81 பேரில் 30 க்கும் மேற்பட்டவர்கள் புதுக்கோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்தவர்கள். 2 ஆண்டுகள் ஆய்வக நுட்புனர் பட்டயப்படிப்பு பயிலும் இந்த 81 மாணவ, மாணவியர்கள் உயிர்வேதியியல், நுண்ணுயிரியல் மற்றும் நோய்க்குறியியல் துறைகளில் செயல்முறை பயிற்சி உள்ளிட்ட பாடத்திட்டங்களை பயில்வதுடன், 2 ஆண்டுகளின் இறுதியில் 3 மாதம் உள்ளுரை பயிற்சியும் பெறுவதால் அவர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.

தனியார் கல்லூரிகளில் ஆய்வ நுட்புனர் பட்டயப்படிப்பு பயில்வதற்கு 2 வருடங்களுக்கு ரூ.1.50 இலட்சம் செலவாகும். ஆனால் அரசு மருத்துவக்கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள் இப்படிப்பிற்கு ஒரு வருடத்திற்கு ரூ.1500 என 2 வருடத்திற்கு ரூ.3000 மட்டும் கல்விக்கட்டணம் செலுத்தினால் போதும். இதன்மூலம் மாணவர்கள் மிகுந்த பயன்பெறுவார்கள். இவர்களின் திறமைமிக்க பங்களிப்பால் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்கு பரிசோதனை முடிவுகள் விரைவாக தரமான சிகிச்சை அளிக்க முடியும். மருத்துவக்கல்லூரி தொடங்கப்பட்ட முதலாம் ஆண்டிலேயே இந்த ஆய்வக நுட்புனர் பட்டய படிப்பும் தொடங்கப்படுவது

புதுக்கோட்டை மக்களுக்கு மேலும் பயனளிக்கும். அரசு மருத்துவக்கல்லூரியில் ரூ1.48 கோடி மதிப்பீட்டில் அதிநவீன எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று அரசு மருத்துவக்கல்லூரியில் செவிலியர் கல்லூரி உள்ளிட்ட பல்வேறு மருத்துவம் சார்ந்த படிப்புகள் மற்றும் பல்வேறு அதிநவீன மருத்துவக்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் பிற மாவட்டங்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற செல்லும் நிலை மாறி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனைத்து சிகிச்சைகளும் சிறப்பாக வழங்கப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதன்முதலாக 2 ஆண்டு ஆய்வக நுட்புனர் பட்டயப்படிப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் இந்த ஆண்டு முதல் ரூ.38 கோடி மதிப்பீட்டில் 48 பாரா மெடிக்கல் கோர்ஸ் அவசர சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகளுக்காக துவங்கப்பட்டு முதன் முதலில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதேபோன்று தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளை தவிர்த்து பிற மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உதாரணமாக ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல், இராமநாதபுரம், திருப்பூர் போன்ற பல்வேறு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் முதல் முறையாக பட்ட உயர் மேற்படிப்பு துவக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழகத்தில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் பட்ட உயர் மேற்படிப்பு துவங்குவது இதுவே முதன் முறையாகும். இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள், நோயாளிகள் மற்றும் பட்டஉயர் மேற்படிப்பு படிக்கும் மாணவர்கள் மிகுந்த பயன்பெறுவார்கள் என்றும் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாரதா, நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவாசுப்பிரமணியன், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட் (எ)அப்துல்ரஹ்மான், மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.பாஸ்கர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**